Ontario Health
Cancer Care Ontario

# இதோ உங்களது FIT பொதி

**நீங்கள் பெருங்குடல் (குடல்) புற்று நோய் இருக்கிறதா எனச் சோதிக்க வேண்டிய காலம்** என்பதால் நீங்கள் இந்த மல நிர்ப்பீடனவிரசாயனச் சோதனை (FIT) பொதியைப் பெறுகிறீர்கள். உங்களது குடும்ப மருத்துவர், தாதி நிபுணர், ஓர் இடத்துக்கிடம் செல்லும் பயிற்றுவிப்பாளர் அல்லது Health811 உங்களுக்காக இதை வேண்டியிருக்கலாம். நீங்கள் ஒரு முதற்குடி ஒதுக்கீட்டில் வாழ்வதாயின், இது உங்களுக்காக ஒரு சுகாதார நிலையத்தால் அல்லது தாதிச் சேவை நிலையத்தால் வேண்டப்பட்டிருக்கக் கூடும்.

பெருங்குடற் புற்று நோய்க்கான உங்களது இடர்ப்பாடு 50 வயதின் பின்னர் அதிகரித்துச் செல்கிறது. **உங்களது ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவ FIT ஐச் செய்வது முக்கியமானது.**

**FIT என்பது ஒரு பாதுகாப்பான, வலியற்ற சோதனையாகும்**, அது உங்களது மலத்தில் சிறு குருதித் துளிகள் உள்ளனவா என்று சோதிக்கிறது, அது பெருங்குடற் புற்று நோயினால் ஏற்படலாம். நீங்கள் வீட்டில் இச்சோதனையைச் செய்யலாம், அதற்குச் சில நிமிடங்களே எடுக்கும். நீங்கள் சோதனையைச் செய்வதற்காக உங்களது உணவுப் பழக்கத்தை மாற்றவோ மருந்து உட்கொள்வதை நிறுத்தவோ வேண்டியதில்லை.

நீங்கள் சோதனையைச் செய்ய முன்னர், உங்களது FIT பொதியில் உங்களுக்கு அவசியமான யாவும் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்:

- FIT குழாய்
- FIT அறிவுறுத்தல்கள்
- அந்தரங்க அறிவித்தல்
- மலச் சேகரிப்புத் தாள்
- அகத்துறிஞ்சும் பொருளுடனான பிளாத்திக்குப் பை
- திரும்ப அனுப்பும் கடிதவுறை

**நீங்கள் நிறைவு செய்த சோதனையை கூடிய விரைவில் திரும்ப அனுப்புங்கள்.** அதனை 2 நாட்களுக்குள் அஞ்சலிடுவது அல்லது கொண்டு சேர்ப்பது சிறந்தது, அப்போது அதனை 14 நாட்களுக்குள் ஆய்வுகூடத்தில் சோதிக்கலாம். கொண்டு சேர்க்கும் இடங்களுக்கும் மணி நேரங்களுக்குமாக locations.lifelabs.com இற்குச் செல்லுங்கள்.
நீங்கள் உங்களது சோதனையை அஞ்சலிட்ட அல்லது கொண்டு சேர்த்த பின்னர், நீங்கள் அடுத்த சில கிழமைகளுக்குள் உங்களது பெறுபேற்றுக் கடிதத்தைப் பெற எதிர்பார்க்கலாம்.

உங்களது சுகாதாரம் முக்கியமானது. **உங்களது FIT ஐ இன்றே செய்யுங்கள்.**

ஏனைய மொழிகளில் மேலதிகத் தகலவகளுக்காக அல்லது அறிவுறுத்தல்களுக்காக, Ontario Health (Cancer Care Ontario) ஐ (**1-866-662-9233**) அழையுங்கள் அல்லது **cancercareontario.ca/colon** இற்குச் செல்லுங்கள். உங்களது FIT தொடர்பில் பிரச்சினைகள் இருந்தால், LifeLabs ஐ (**1-833-676-1426**) அழையுங்கள்.

**இத்தகவல்கள் ஓர் அணுகக் கூடிய வடிவில் தேவையா?**
1-877-280-8538, TTY 1-800-855-0511, info@ontariohealth.ca